தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 195/ந/2019
நாள். 07.03.2022

திரு.வி.அன்பழகன்,
சென்னை – 56. – முறையீட்டு மனுதாரர்

1. திரு. சிவக்குமார்,
ஆணையாளர், பல்லவபுரம் நகராட்சி.
2. திரு. கருப்பையா ராஜா,
நகராட்சி ஆணையாளர் (பொ)
பல்லவபுரம் நகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

சென்னை 600 056, பூந்தமல்லி, மல்லியம் நரசிம்மன் நகர், எண். 13/9 என்கின்ற முகவரியில் வசித்த திரு.வி.அன்பழகன் என்பவரின் 22.11.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.11.2019 அன்று பெறப்பட்டு, 195/2019 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை 600 056, பூந்தமல்லி, மல்லியம் நரசிம்மன் நகர், எண். 13/9 என்கின்ற முகவரியில் வசித்த திரு.வி.அன்பழகன் என்பவர் தமது மனுவில்

"காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரம் நகராட்சியில் 13.07.2015ல் நிறைவேற்றப்பட்ட நகர்மன்ற தீர்மானத்தின் பேரிலும், நகராட்சி பொறியாளர் திரு. கருப்பையா ராஜா, தொழில் நுட்ப அனுமதியுடன் பல்லவபுரம் பெரு நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி பள்ளிகளில் கழிவறைகளை சுத்தம் செய்யும் பராமரிப்பு பணிக்கு 30 நாட்களுக்கு மட்டும் ரூ.9.75 இலட்சத்துக்கு தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளது. தீப்தி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் இருக்கிறதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு 30 நாட்களுக்கு மட்டும் ரூ.9.75 இலட்சத்துக்கு பணி கொடுத்துவிட்டு, விதி முறைகளை மீறி சட்டத்துக்கு புறம்பாக 1.1.2016 முதல் 31.12.2016 வரையும், 1.1.2017 முதல் 31.3.2017

வரை நீட்டிக்கப்பட்டது. மீண்டும் நகர மன்றத்தில் 22.03.2017–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 01.04.2017 முதல் 31.03.2018 வரையும் ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டது. 01.04.2018 முதல் இன்று வரை தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனம் தான் பணிகளை தொடருகிறது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை அறிக்கையில், தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு விதிமுறைகளை மீறி, சட்டத்துக்கு புறம்பாக ஒப்பந்தம் கொடுத்துள்ளதை உறுதி செய்துள்ளது.

1. ஒப்பந்தப்புள்ளி ரூ.9.75 இலட்சம் ஒரு மாதத்திற்கு கோரப்பட்டு, ஒராண்டிற்கு பணி உத்தரவு வழங்கியதும், மீண்டும் தொடர்ந்து பணி நீட்டிப்பு கொடுத்ததும் ஒப்பந்த விதிகளுக்கு முரணானதாகும்.

2. பணி உத்தரவு ஒராண்டிற்கு வழங்கப்பட்டுள்ளதால், ஒராண்டிற்கான மொத்த செலவினம் ரூ.117 இலட்சமாகும். அரசாணை எண்.44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.24.02.2016–ன்படி ரூ.100 இலட்சத்திற்கு மேல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாகத்தின் தலைமை பொறியாளர் (C.E) தொழில் நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் தொழில் நுட்ப அனுமதி பெறாமல் தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் 20 சதவிகிதம் சுமார் ரூ.25 இலட்சம் கமிசன் / இலஞ்சம் வாங்கிக் கொண்டு ஆணையராக இருந்த திரு.சிவக்குமார் ஒப்புதலுடன், பொறியாளர் திரு.கருப்பையா ராஜாவே தொழில் நுட்ப அனுமதி வழங்கினார். இது அரசாணையை மீறிய செயலாகும். 2016-2017, 2017-2018 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.25 இலட்சம் கமிசன் / இலஞ்சம் பெற்றுள்ளார்கள்.

3. அரசாணை எண்.33 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.08.2016–ன்படி ஆண்டிற்கு ரூ.68 இலட்சத்திற்கு மேல் உள்ள செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் ஆண்டிற்கு ரூ.117 இலட்சத்திற்கு மேல் உள்ள இச்செலவனத்திற்கு பல்லவபுரம் நகராட்சி ஆணையராக இருந்த திரு.சிவக்குமார், பொறியாளராக இருந்த திரு.கருப்பையாராஜா இருவரும் நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெறாமல் நகர மன்றமே அனுமதி வழங்கியுள்ளது. அரசாணையை மீறிய செயலாகும்.

4. ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகைக்கு இணையதளம் மூலமே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு கோரப்படவில்லை. இது ஒப்பந்த விதிகளுக்கு முரணானதாகும்.

5. ரூ.100 இலட்சத்துக்கு மேல் உள்ள செலவினத்துக்கு ஒரு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனையாகும் தமிழ் நாளிதழிலும், ஒரு மாநில ஆங்கில நாளிதழிலும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிடப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு விளம்பரம் ஏதும் வெளியிடப்படவில்லை.

6. பள்ளிகளின் கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு தொழில் நுட்ப அனுமதியில் 4 பெண்கள், 4 ஆண்கள், இரண்டு மாற்றுத் திறனாளிகள் மற்றும் 10 சிறுநீர் கழிவறைகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பிறகு தொகை கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் கழிவறை என்பது ஒரு கழிவறை, ஒரு சிறுநீர் கழிவறை என்பதாகும். 184 கழிவறைகளுக்கு ஒவ்வொரு மாதமும் தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கழிவறை எத்தனை, சிறுநீர் கழிவறைகள் எத்தனை என்ற விவரம் ஏதும் இல்லை.

7. ஏப்ரல், மே மாதங்களில் பள்ளிகளுக்கு விடுமுறை. ஆனால் ஏப்ரல், மே மாதங்களுக்கு பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்ததாக ரூ.9.75 இலட்சம் என தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு கொடுத்ததாக கோப்புகளில் உள்ளது. ஆனால் இரண்டு மாதங்களுக்கான ரூ.19.50 இலட்சம், தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு கொடுத்தது போல், கோப்புகளில் பதிவு செய்துவிட்டு, ரூ.19.50 இலட்சத்தை இலஞ்சமாக, ஆணையராக இருந்த திரு.சிவக்குமாரும், பொறியாளராக இருந்த திரு.கருப்பையா ராஜாவும் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

8. கழிவறைகளுக்கு மதிப்பீடு தயாரித்தப்போது சேவை வரி 12.36 சதவிகிதம் சேர்த்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. சுகாதாரப்பணிகளுக்கு சேவை வரியிலிருந்து மத்திய அரசு விலக்கு அளித்துள்ளது. இதனால் நகராட்சிக்கு ரூ.11,13,200 இழப்பு ஏற்பட்டுள்ளது. ரூ.11.13 இலட்சத்தை ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்ய வேண்டும். சேவை வரியுடன் மதிப்பீடு தயாரித்த ஆணையராக இருந்த திரு.சிவக்குமார், பொறியாளராக இருந்த திரு.கருப்பையா ராஜா இருவரின் சம்பளத்திலிருந்து ரூ.11.13 இலட்சத்தை பிடித்தம் செய்ய வேண்டும். நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிகளுக்கு விதிமுறைகளை, சட்டத்துக்கு புறம்பாக, அரசாணைகளை மீறி தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் அளித்ததில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.35 இலட்சத்துக்கு முறைகேடுகள் நடந்துள்ளது. நகராட்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.11.13 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் தீப்தி எண்டர்பிரைசஸ் ஒப்பந்தத்தில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது. பல்லாவரம் நகராட்சி நிர்வாகம் சட்டத்துக்கு புறம்பாக

செயல்பட்டுள்ளது என்பதை உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை அறிக்கையில் உறுதி செய்துள்ளது.

நகராட்சி நிர்வாகத்துறை அரசு ஆணைகளை மதிக்காமல், விதிமுறைகளை மீறி, டெண்டர் டிரான்பரன்சி சட்டத்தை மீறி, சட்ட விரோதமாக, பல லட்சம் வாங்கிக்கொண்டு தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு பள்ளி கழிவறைகளை பராமரிக்க ஒப்பந்தம் கொடுத்த பல்லவபுரம் நகராட்சி ஆணையராக இருந்த திரு.சிவக்குமார் (தற்போது திருப்பூர் மாநகராட்சி ஆணையர்) மற்றும் பல்லவபுரம் நகராட்சி பொறியாளராக இருந்த திரு.கருப்பைய ராஜா (தற்போது தாம்பரம் பெரு நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையர் இருவர் மீது விரிவான விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் மனு தொடர்பான அறிக்கையை அனுப்பிவைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 02.12.2019 நாளிட்ட அறிக்கையின் மூலம் ஆணையிடப்பட்டது. பல்லாவரம் நகராட்சியில் ஆணையராக இருந்து திருப்பூர் மாநகராட்சிக்கு மாறுதலில் சென்ற ஆணையாளர் திரு. K. சிவகுமார் தமது 30.01.2020 நாளிட்ட அறிக்கையில்

> “மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மிக முக்கியமான திட்ட அறிவிப்புகளில், அனைத்து பள்ளிகளிலும் கழிவறைகள் 100 விழுக்காடு சுத்தமாக பராமரிக்கவும், அந்த பணியினை உள்ளாட்சி அமைப்புகளை கொண்டு பராமரித்திட வெளியிடப்பட்ட அரசாணை எண்.77 பள்ளி கல்வித்துறை நாள்:13.04.2015ன் அடிப்படையில், பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு நகராட்சி தொடக்கம், நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் உள்ள கழிவறைகள் பராமரித்தல் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கவும் பள்ளிகளில் கழிவறைகள் நகராட்சி மூலம் 100 விழுக்காடு பராமரித்தல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் நகர்மன்ற தீர்மானம் எண்.95 நாள் 13.07.2015ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
>
> இப்பணியினை மேற்கொள்ள கழிப்பறை ஒரு இருக்கைக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் தோராய செலவினமாக ரூ.8,076/- என அப்போதைய நகராட்சி பொறியாளரால் கணக்கீடு (Data) செய்து வழங்கப்பட்டுள்ளது.
>
> அன்றைய தேதியில் பணிபுரிந்த பொறியாளர் கணக்கிட்டு வழங்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு மாதத்திற்கு ஆகும் செலவினம் ரூபாய் 14,85,984/- இந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு கணக்கிடும் போது ரூ.1 கோடியே 78 லட்சம் செலவினம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என

கருதி தோராயமாக கணக்கிட்டு ஒப்பந்தப்புள்ளி ரூ.9,75,000/–த்திற்கு மட்டுமே கோரப்பட்டு மதிப்பீட்டினை விட குறைவான தொகை ரூ.9,20,000/– ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு கிட்டதட்ட ரூபாய் 70.00 இலட்சம் வரையில் செலவினம் தவிர்க்கப்பட்டுள்ளது. நிதி இழப்பு ஏற்படவில்லை.

பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2 அரசு பள்ளிகளும் 9 நகராட்சி பள்ளிகளும் ஆக மொத்தம் 11 பள்ளிகளில் 184 எண்ணிக்கைகள் கழிவறைகள் மற்றும் யூரினல்ஸ் பராமரிக்கப்பட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. 184 எண்ணிக்கைகள் கழிவறைகள் மற்றும் யூரினல்கள் ஒரு கழிவறை இருக்கை மேற்குறித்த தோராய செலவின கணக்கீட்டின் படி 100 சதவிகித பராமரிப்பு செய்யப்பட வேண்டும்.

அதனடிப்படையில் 2015–16ம் நிதியாண்டிற்கு மதிப்பீடு ரூபாய் 9.75 லட்சத்தில், 30 நாட்கள் பணிக்காலத்தினை அடிப்படையாகக் கொண்டு 13.11.2015ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | Deepthi Enterprises | 9,20,000 |
| 2. | N. Anand | 9,84,400 |
| 3. | K.D. Sales and Services | 9,70,600 |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு கொண்டு செல்லப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிட நகரமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு மன்றம் தனது தீர்மானம் எண்.317 நாள்: 30.12.2015ல் ஒப்புதல் அளித்துள்ளது.

அதனடிப்படையில் பணி உத்தரவு வழங்கப்பட்டு தீப்தி எண்டர்பிரைசஸ் என்கின்ற நிறுவனத்தினரால் பணி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. பள்ளிகளில் ஒப்பந்ததாரரால் பணிமேற்கொள்ளப்பட்ட காலங்களுக்கு உரியவாறு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களால் வழங்கப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் பிரதி மாதமும் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2015–2016ம் நிதியாண்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதனடிப்படையில் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

பணியில் தொய்வு ஏற்படக் கூடாது என்கின்ற உயரிய நோக்கத்திலும், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்புந்ததாரர் தெரிவு செய்வதற்கு மேலும்

காலதாமதம் ஏற்படும் என்பதனை கருத்திற் கொண்டும், மேலும் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதினால் வருடாவருடம் வெளியிடப்படும் பணிகளுக்கான Schedule of Rates கடந்த ஆண்டினை விட தொடர்ந்து வரும் ஆண்டுகளில் செலவினம் கூடுவதற்கு வாய்ப்புள்ளதனை கருதியும், கூடுதல் செலவினத்தை தவிர்க்கும் பொருட்டு பணியின் முக்கியத்துவம் கருதி 2016ம் வருடத்தில் பணி மேற்கொள்ளப்பட்ட அதே விலை விகிதத்தில் ஜனவரி 2017 முதல் மார்ச் 2017 முடிய உள்ள காலத்திற்கு நகரமன்றத்திற்கு பொருள் கொண்டு செல்லப்பட்டு பணிநீட்டிப்பு செய்யப்பட்டது.

ஒப்பந்ததாரரின் பணி திருப்திகரமாக இருந்த நிலையில் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களிடமிருந்து பள்ளி கழிவறை பராமரிப்பு குறித்து எந்தவித புகாரும் வரப்பெறாத நிலையிலும், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் செலவின மிகுதியினை கருத்திற்கொண்டும், ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரை ஏற்கனவே இப்பணி செய்து வரும் அதே ஒப்பந்ததாரரை கொண்டு கழிவறைகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 ஆகிய வருடங்களுக்கான விலை விகிதங்கள் முறையாக மன்றத்திக்கு பொருள் கொண்டு செல்லப்பட்டு, ஒப்பந்ததாரரின் பணி திருப்திகரமாக எந்த வித புகாருக்கும் இடமில்லாமல் இடையூன்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு நகர மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியில் எந்தவித முறைகேடுகள் நடக்கவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மிக முக்கியமான திட்டமான பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியரின் உடல் நலம் பேணி பாதுகாக்கும் பொருட்டும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை நல்ல முறையில் செயல்படுத்திடவும் அனைத்து நடவடிக்கைகளும் நகரமன்ற அனுமதியின் பேரிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது." என்று தெரிவித்துள்ளார்.

3) மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2020 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையாளர் திரு.K.சிவகுமார், பொறியாளர் திரு.கருப்பையராஜா ஆகியோருக்கு 02.12.2019 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 30.01.2020 நாளிட்ட விசாரணையில் ஆணையாளர் திரு.K.சிவகுமார் மற்றும் பொறியாளர் திரு.மு.கருப்பையராஜா ஆகியோர் கூட்டாக கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

"திரு.அன்பழகன் என்பவருடைய 22.11.2019 நாளிட்ட புகார் மனு விவரம் எங்களுக்கு தெரியும் திரு.அன்பழகன், பல்லாவரம் நகராட்சியில் நான் பணிபுரியும் போது பணம் பறிக்கும் நோக்கில் பலதடவை முயற்சி செய்தார்.

நான் அதற்கு உடன்படாததால் உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்று அதையே மனுவாக கொடுத்துள்ளார்.

பொதுவாக உள்ளாட்சி நிதி தணிக்கை குறிப்புகள் தணிக்கையின் போது உத்தேசமாக அவர்களுக்கு தெரிந்த வகையில் எழுதுவார்கள். அதற்கு பின்பு அதற்கு உரிய விளக்கங்கள் கோரும் போது சரியான ஆதாரங்கள், ஆணைகள், அறிவுரைகள் போன்றவைகளை வைத்து நாங்கள் தணிக்கை தடைகளுக்கு பதில் அளிக்கும் போது அவைகள் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படும் அப்போது அவர்கள் அளவில் முடிவு செய்யப்படாத நேர்வுகளை அடுத்த கட்டத்தில் உள்ள இதற்கான உள்ள குழுக்களிடம் முறையீடு செய்யப்பட்டு அங்கும் தீர்வு செய்யப்படும் எனவே, எங்கள் மேல் எழுப்பப்பட்ட தணிக்கை தடைகள் அனைத்து உயர்மட்ட குழுக்கள் வரை பரிசீலிக்கப்பட்டு இறுதியாக முடிவு செய்யும் வரை அவைகள் உறுதி செய்யப்பட்டவை அல்ல. எனவே, எவ்வித ஆதாரம் இன்றி ஆரம்ப கட்டத்தில் எழுப்பப்பட்ட உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையினை தகவல் அறியும் உரிமை சட்டத்தில் பெறப்பட்டு அதையே புகாராக அனுப்புவது சரியானது அல்ல என தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர் எங்களிடம் பணம் பறிக்கும் நோக்கில் அணுகியது, நாங்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அவர் சிறைக்கு சென்றதால், அவர் சிறைக்கு செல்வதற்கு நாங்கள் தான் காரணம் என்பதால் இதுபோன்று புகார் மனுக்களை அனுப்பி உள்ளார் என தெரிவித்துக் கொள்கிறோம்.

புகார் மனுவில் உள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுக்கிறோம். இதுகுறித்து எழுத்து பூர்வமாக இன்று விசாரணையின் போது நேரடியாக ஒரு விரிவான எழுத்து பூர்வ அறிக்கையினை சமர்ப்பித்துள்ளோம். அவற்றை எங்களுடைய வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். அர்த்தமற்ற குற்றச்சாட்டுகள் என்பதால் குற்றச்சாட்டில் இருந்து எங்களை விடுவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார். நேரடி வாக்குமூலத்தின் போது சமர்பித்த எழுத்து பூர்வ அறிக்கையில் 30.01.2020 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களே தெரிவிக்கப்பட்டுள்ளது''.

4) இந்நேர்வில் எதிர்மனுதாரர்கள் ஏற்கனவே நேரடியாக 30.01.2020 அன்று விசாரிக்கப்பட்ட நிலையில், மனுதாரரை 09.09.2021 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு 11.08.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 09.09.2021 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

“சென்னை, பல்லவபுரம் நகராட்சியில் உள்ள பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்வதில் தனியாருக்கு அளிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் முறைகேடுகள் நடைபெற்று நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை பத்திகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இம்முறைகேட்டிற்கு காரணமான அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக உள்ளாட்சி நிதித் தணிக்கை பத்திகளின் அறிக்கையின் நகலினையும் இத்துடன் இம்மன்றத்தில் சமர்பிக்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

5) இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு அவரது வாக்குமூலம், ஆணையாளரின் அறிக்கை மற்றும் ஆணையாளர், பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

பல்லவபுரம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி பள்ளிகளில் கழிவறைகளை சுத்தம் செய்யும் பராமரிப்பு பணிக்கு 13.07.2015ல் நிறைவேற்றப்பட்ட நகர்மன்ற தீர்மானத்தில் பராமரிப்பு பணிக்கு 30 நாட்களுக்கு மட்டும் ரூ.9.75 லட்சத்திற்கு தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கியதில் ஊழல் நடைபெற்றுள்ளது, விதிமுறைகளை மீறி சட்டத்திற்கு புறம்பாகவும் ஒப்பந்த விதிகளுக்கு முரணாகவும் செயல்பட்டு 2016–17, 2017–2018 ஆகிய ஆண்டுகளுக்கு அதே நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து கொடுத்து ஆணையாளர் மற்றும் பொறியாளர் இருவரும் கூட்டாக செயல்பட்டதால் நகராட்சிக்கு ரூ.11.13 லட்சம் நிதி இழப்பு என்றும் அரசாணைகளை மீறி தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளித்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.35 இலட்சம் முறைகேடுகள் நடந்துள்ளது என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேலும் தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திடம் 20 சதவீதம் சுமார் 25 இலட்சம் இலஞ்சமாக ஆணையாளரும் பொறியாளரும் பெற்றுக் கொண்டதாக தெரிவித்த மனுதாரர் அதற்கான ஆவணம் எதையும் சமர்ப்பிக்கவில்லை.

இந்நிலையில் ஆணையாளர் இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் மிக முக்கியமான திட்ட அறிவிப்பு என்பதால் 100 விழுக்காடு சுத்தமாக பராமரித்திட அரசாணை எண்.77 பள்ளி கல்விதுறை நாள். 13.04.2015 ன் அடிப்படையில் பல்லாவரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சிப் பள்ளிகளில் கழிவறைகளை சுத்தமாக பராமரிக்க ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் நகர்மன்ற தீர்மானம் எண்.95, நாள்.13.07.2015 ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணியினை மேற்கொள்ள கழிப்பறை ஒரு இருக்கைக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் தோராய செலவினமாக 8076/– என அப்போதைய நகராட்சி பொறியாளரால் கணக்கீடு செய்து

வழங்கப்பட்டது. அந்த மதிப்பீட்டின்படி ஒரு கோடியே 78 லட்சம் செலவு மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதால் தோராயமாக கணக்கிட்டு ஒப்பந்தபுள்ளி ரூ.9,75,000/– த்திற்கு மட்டுமே கோரப்பட்டு மதிப்பீட்டினை விட குறைவான தொகை ரூ.9,20,000/– ஒப்பந்தபுள்ளி வரப்பெற்று நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிட நகர்மன்றத்தில் முடிவு செய்து தீர்மான எண். 317 நாள்.30.12.2015 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

6) ஆனால் ஆணையாளரின் அறிக்கையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2 அரசு பள்ளிகளும், 9 மாநகராட்சி பள்ளிகளும் என 11 பள்ளிகள் உள்ளதாகவும் அதில் 184 எண்ணிக்கையிலான கழிப்பறைகள் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஒரு கழிவறை என்பது, ஒரு கழிவறை மற்றும் ஒரு சிறுநீர் கழிவறை சேர்ந்ததாகும். 184 கழிவறைகளுக்கும் ஒவ்வொரு மாதமும் தொகை வழங்கப்படுகிறது. ஆனால் இக்கழிவறைகளில் எத்தனை சிறுநீர் கழிவறைகள் உள்ளன என்ற விவரம் தெரிவித்து ஒப்பந்தபுள்ளி கோரவில்லை. மேலும், இப்பணிக்கு தொழில்நுட்ப அலுவலரால் மதிப்பீடு தயாரித்தலில் 4 பெண்கள் 4 ஆண்கள் இரண்டு மாற்றுத்திறனாளிகள் மற்றும் 10 சிறுநீர் கழிவறைகளுக்கு (Universal Design Toilet) மாதம் ஒன்றிற்கு ரூ.80,764.00 செலவாகும் எனவும், ஒரு கழிவறைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.8,076.00 செலவாகும் எனவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசு ஆணை (நிலை) எண்.166 நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை நாள்.23.11.2016–ல் கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு அதாவது

1) ஆண், பெண் இருசாராரும் பயிலும் பள்ளி (Co-education school) என்றால் கழிவறையை சுத்தம் செய்ய குறைந்தது ஒரு பெண் பணியாளர் ஒரு ஆண் பணியாளர் இவர்களுடன் ஒரு துப்புரவாளர் (Sweeper).

2) மகளிர்கள் மட்டும் பள்ளி என்றால் குறைந்தது 2 பெண் பணியாளர்கள் ஒரு துப்புரவாளர் (Sweeper).

3) ஆண்கள் பள்ளி என்றால் (boys school) என்றால் குறைந்தது 2 ஆண் பணியாளர்கள் (worker) ஒரு துப்புரவாளர் (Sweeper) என்ற அடிப்படையில் பணியமர்த்தலாம் என ஆணையிடப்பட்டுள்ளது. அந்த வகையில் ஒரு பள்ளிக்கு 3 பணியாளர்கள்தான் பணியமர்த்தப்பட வேண்டும்.

மேற்கண்ட அரசு ஆணையில் தெரிவித்துள்ளபடி பள்ளி கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிகளுக்கு பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யாமல் கழிவறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதாவது 11 பள்ளிகளுக்கு 184 கழிவறைகள் என்ற வீதத்தில் மதிப்பீடு தவறான முறையில் தயார் செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இது அரசு ஆணையை மீறிய செயலாகும்.

மேலும் 12.36% சேவைவரி சேர்த்து மேற்காணும் தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் சேவைவரியிலிருந்து (GST) சுகாதாரப் பணிகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் மதிப்பீட்டில் 12.36% சேவைவரி சேர்த்து மதிப்பீடு தவறாக தயாரிக்கப்பட்டு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது (Service Tax Department Notification No. 25/2012).

மேலும், பள்ளி செயல்படாத நாட்களிலும் வழக்கம் போல் வழங்கப்படும் மாதாந்திர தொகையே வழங்கப்பட்டுள்ளதையும் விசாரணையில் அறிய முடிகிறது. இதன் மூலம் ஒப்பந்ததாரருக்கு ஆதாயம் கிடைக்கும் வகையில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் இருவரும் செயல்பட்டுள்ளது தெளிவாக தெரிகிறது.

அரசு ஆணைப்படி 11 பள்ளிகளுக்கும் 11 x 3 = 33 பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். ஆனால் பள்ளி தலைமை ஆசிரியர்களின் கடிதப்படி கழிவறையை சுத்தம் செய்த பணியாளர்களின் எண்ணிக்கை 28 ஆக உள்ளது. 28 பணியாளர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி, காப்பீடு போன்றவை உரிய கணக்கு தலைப்பில் செலுத்தப்படவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

7) மேலும், பணி உத்தரவு ஓராண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது ஓராண்டிற்கு மொத்த செலவினம் (மாதம் ரூ.9,20,000/– என்றால் 12 மாதங்களுக்கு) ரூ.1,10,40,000/– ஆகும் ரூ.100/– லட்சத்திற்கு மேல் உள்ள செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும் என்று அரசு ஆணை எண்.44, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.02.2016ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.50/– இலட்சத்திற்கு மிகைப்படும் டெண்டருக்கு நாளிதழ் மற்றும் அலுவலக நோட்டீஸ் போர்டுகளில் அறிவிக்கை விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்று அரசு ஆணை (நிலை) எண்.425/ நிதி (Sal) நாள்.11.12.2012 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ரூ.68 இலட்சத்திற்கு மேல் உள்ள செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என்று அரசு ஆணை எண்.334, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.08.2016ல் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ரூ.100.00 இலட்சத்திற்கு மேல் உள்ள செலவினத்திற்கு ஒரு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனையாகும் நாளிதழிலும் ஒரு ஆங்கில நாளிதழிலும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் வெளியிடப்படவேண்டும். ஆனால் நடைமுறை விதிகள் எதனையும் ஆணையாளர் மற்றும் பொறியாளர் பின்பற்றாமல் நகர்மன்ற தீர்மானம் ஒன்றை வைத்தே செயல்பட்டுள்ளனர். மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளில் இது முக்கியமானது என்றாலும் அவசரத்தில் செயல்படுத்தியிருந்தாலும் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் பின்னேற்பு ஆணையாவது பெற்றிருக்கலாம் அதையும் நிர்வாகம் செய்யவில்லை. இச்செயல் தன் அதிகாரத்தை தவறான வழியில் துஷ்பிரயோகம் செய்து நிர்வாக சீர்கேட்டை ஏற்படுத்தியதாகவே இம்முறைமன்றம் கருதுகிறது.

8) 2015–16, 2016–17, 2017–18 ஆகிய ஆண்டுக்கான விலைவிகிதங்கள் முறையாக மன்றத்திற்கு பொருள் கொண்டு செய்யப்பட்டு ஒப்பந்ததாரரின் பணி திருப்திகரமாகவும் எந்தவித புகாருக்கும் இடமில்லாமல் இடையூறுன்றி இருந்ததாலும் மேலும் பணி மேற்கொள்ளப்பட்ட காலங்களுக்கு உரியவாறு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களால் வழங்கப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையிலும் தொடர்ந்து அதே நிறுவனம் பணியை மேற்கொள்வதற்கு மன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற ஆணையரின் கருத்து ஏற்ககூடியதல்ல.

எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையில் ஒரு தொழில்நுட்ப குழுவை அமைத்து இந்நேர்வில் ஒப்பந்தபுள்ளி கோரும் முறைகளில் அரசு ஆணைகள் மற்றும் நடைமுறை விதிகள் எதனையும் பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்பட்ட அதிகாரிகளால் நகராட்சிக்கு எவ்வளவு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை கண்டறிந்து அதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூல் செய்ய உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும், மேலும் இவ்வாறு தன்னிச்சையாக செயல்பட்டு நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படகாரணமான அதிகாரிகள் மீது துறைரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. வி.அன்பழகன்,
13/9, மல்லியம் நரசிம்மன் நகர்,
பூந்தமல்லி, சென்னை 600 056.

2) திரு. சிவக்குமார்,
ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

3) திரு. கருப்பையா ராஜா,
நகராட்சி ஆணையாளர் (பொ),
தாம்பரம் நகராட்சி.
தாம்பரம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

08/03/22

செயலாளர்.

08/03/22